## சுருக்கம்

வேளாண்மை - தோட்டக்கலை - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து இடங்களில் ஐந்திணை பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் அமைத்தல் - முதற்கட்ட பணிகளுக்கு (பகுதி-I)க்கு ரூபாய் 32.413 கோடி நிதி ஒப்பளிப்பு - புதிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (தோ.க1) துறை

அரசாணை (நிலை) எண்.1, நாள் 03.01.2011.
திருவள்ளுவர் ஆண்டு 2041
மார்கழி 19

படிக்க.

1. அரசாணை (நிலை) எண்.221, வேளாண்மைத் (தோ.க1) துறை,நாள் 30.9.2010.

மீண்டும் படிக்க:

2. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மேலாண்மை இயக்குநர், அவர்களின் கடித எண். FPM2/5126/2010, நாள் 16.11.2010.
3. அரசு கடித எண். 32390 / தோ.க1 / 2010 - 1, வேளாண்மைத் (தோ.க1) துறை, நாள்:29.11.2010.
4. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மேலாண்மை இயக்குநர், அவர்களின் கடித எண்.FPM2/5126/2010, நாள் 29.11.2010.

------

**ஆணை:**

கோயம்புத்தூரில் சூன் 23-27 வரை நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், 27.06.2010 அன்று மாநாட்டின் நிறைவு விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள் :-

"ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்க காலத்தில் தமிழகத்தைச் சூழல் இயலின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நமது முன்னோர் ஐந்திணை நிலங்களாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு சூழல் இயல் பகுதியும் அதற்கு உகந்த தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் கொண்டவை. இந்த இயற்கை வளம் - உணவு உத்தரவாதத்திற்கும், உடல் நலம் காப்பதற்கும், சித்த வைத்தியத்திற்கும் பேருதவியாக இருந்து வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றம் 2010ஆம் ஆண்டினை "உலக

[த.தி.பா........

உயிரியல் பன்மை ஆண்டு (International Year of Bio-diversity)`` என அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பின் நினைவாக, தமிழக அரசு சார்பில், ஐந்திணை நிலவகைகளில் ``பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் (Genetic Gardens)`` அமைக்கப்படும். புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன், எம்.பி., அவர்கள் இந்தப் பாரம்பரிய மரபணுப் பூங்காக்களின் அமைப்பாளராக இருப்பார்``

2. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்சொன்ன ஐந்திணை மரபணுப் பூங்காக்கள் அமைக்க கீழ்க்கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டது:-

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | ஏற்காடு, சேலம் மாவட்டம் (தோட்டக்கலைத்துறை பண்ணை) |
| முல்லை | - | சிறுமலை, திண்டுக்கல் மாவட்டம் (தோட்டக்கலைத்துறை பண்ணை) |
| மருதம் | - | சாக்கோட்டை (மருதாநல்லூர்) தஞ்சை மாவட்டம் (வேளாண்மைத்துறை அரசு விதைப் பண்ணை) |
| நெய்தல் | - | திருக்கடையூர், நாகப்பட்டிணம் மாவட்டம் (வேளாண்மைத்துறை அரசு விதைப் பண்ணை) |
| பாலை | - | அச்சடிப்பிரம்பு கிராமம், இராமநாதபுரம் மாவட்டம் (புறம்போக்கு நிலம்) |

மேற்சொன்ன அரசாணையில் மேற்படி பூங்காக்கள் அமைப்பது தொடர்பாக மாநில அளவிலான வழிகாட்டுக்குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டது.

3. தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மேலாண்மை இயக்குநர் பார்வை 2ல் கண்டுள்ள தமது கருத்துருவில் சங்கக்கால இலக்கியத்தில் எடுத்துக்கூறியுள்ள ஐந்திணைகளில் கலாச்சாரம் மற்றும் ஏனைய கலைகள் ஆகியவற்றை இப்பூங்காக்களில் அமைப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும், இப்பூங்காக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தின்படி, சங்க கால இலக்கியங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மரம், செடி, கொடிகள், விலங்கினங்கள், கட்டிட அமைப்புகள், கலாச்சாரம் மற்றும் கலைகள் அனைத்தையும் எடுத்துக்காட்டும் வண்ணம் அமையும் என்றும், இதைத்தவிர இப்பூங்காக்கள் ஐந்திணைகளில் இடம்பெற்ற மரம், செடி, கொடிகள் அனைத்தும் தற்போது சாகுபடியில் உள்ளது மற்றும் சாகுபடியில் அல்லாத அரிய வகைகளை உள்ளடக்கி இருக்கும் என்றும், இப்பகுதியை செடிகள் இனப்பெருக்கம் செய்திட தேவையான நாற்றாங்கால்களும், இப்பூங்காக்களில் அமைக்கப்பட்டு

[த.தி.பா……..

நாற்றுக்கள் உற்பத்தி செய்து மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்றும், முக்கியமாக பொருள் விளக்க மையம், மரபணு வங்கி ஆகியவை அமைக்கப்படும் என்றும் இவை பள்ளி, கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மாணவ, மாணவியருக்கு விலைமதிப்பற்ற பொக்கிஷ கல்வி மையமாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. இரண்டாவது மாநில அளவிலான வழிகாட்டு கூட்டம் 29.10.2010 அன்று நடைபெற்றது என்றும், அதில் ஐந்திணை மரபணு பூங்காக்கள் திட்டவடிவமைப்பு மற்றும் திட்ட மதிப்பீடு இறுதி செய்தல் குறித்து விவாதிக்கப்பட்டது என்றும், அதனடிப்படையில், இத்திட்ட வடிவமைப்பாளரிடம் பூங்காக்களின் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது என்றும், முதற்கட்டமாக பூங்காக்கள் அமைப்பதற்கு தேவையான செயற்குறிப்பு தயார் செய்து கீழ்க்கண்டவாறு அறிக்கை அளித்துள்ளார் :-

(அ) குறிஞ்சி – ஏற்காடு

<u>திட்டம் மற்றும் நிதி மதிப்பீட்டின் விவரம்</u>

| பாரம்பரிய மரபணுப் பூங்காவின் பெயர் | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் மேற்கொள்ளப்படவுள்ள மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | ஏற்காடு (சேலம்) | 75 | 20 | 9.879 |

(ரூபாய் கோடியில்)

<u>குறிஞ்சி மரபணு பூங்கா</u>

| | |
|---|---|
| 1. உயிரியல் நில எழிலூட்டம் | 1.251 |
| 2. கட்டுமான பொறியியல் நில எழிலூட்டம் | 6.084 |
| 3. நீர்பாசன பணிகள் மற்றும் சூரியஒளி விளக்குகள் | 1.020 |
| 4. இதர செலவினம் | 0.835 |
| 5. திட்ட பராமரிப்பு செலவினம் | 0.689 |
| மொத்தம் | 9.879 |

[த.தி.பா........

(ஆ) முல்லை -- சிறுமலை:

<u>திட்டம் மற்றும் நிதி மதிப்பீட்டின் விபரம்</u>

| பாரம்பரிய மரபணுப் பூங்காவின் பெயர் | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் மேற்கொள்-ளப்படவுள்ள மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் உத்தேசிக்-கப்பட்டுள்ள மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| முல்லை | சிறுமலை (திண்டுக்கல்) | 25 | 12 | 8.200 |

(ரூபாய் கோடியில்)

முல்லை பரபணு பூங்கா

| | |
|---|---|
| 1. உயிரியல் நில எழிலூட்டம் | 0.734 |
| 2. கட்டுமான பொறியியல் நில எழிலூட்டம் | 5.711 |
| 3. நீர்பாசன பணிகள் மற்றும் சூரியஒளி விளக்குகள் | 0.490 |
| 4. இதர செலவினம் | 0.693 |
| 5. திட்ட பராமரிப்பு செலவினம் | 0.572 |
| மொத்தம் | 8.200 |

(இ) மருதம்--சாக்கோட்டை (மருதா நல்லூர்)

<u>திட்டம் மற்றும் நிதி மதிப்பீட்டின் விபரம்</u>

| பாரம்பரிய மரபணுப் பூங்காவின் பெயர் | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் மேற்கொள்-ளப்படவுள்ள மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் உத்தேசிக்-கப்பட்டுள்ள மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| மருதம் | மருதாநல்லூர் (தஞ்சாவூர்) | 21.47 | 20 | 4.071 |

[த.தி.பா.......

(ரூபாய் கோடியில்)

மருதம் மரபணு பூங்கா

1. உயிரியல் நில எழிலூட்டம் 0.573

2. கட்டுமான பொறியியல் நில எழிலூட்டம் 2.570

3. நீர்பாசன பணிகள் மற்றும் சூரியஒளி விளக்குகள் 0.300

4. இதர செலவினம் 0.344

5. திட்ட பராமரிப்பு செலவினம் 0.284

மொத்தம் 4.071

(ஈ)நெய்தல் – திருக்கடையூர்.

திட்டம் மற்றும் நிதி மதிப்பீட்டின் விபரம்

| பாரம்பரிய மரபணுப் பூங்காவின் பெயர் | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் மேற்கொள்ளப்படவுள்ள மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| நெய்தல் | திருக்கடையூர் (நாகப்பட்டிணம்) | 14.61 | 7 | 5.825 |

(ரூபாய் கோடியில்)

நெய்தல் மரபணு பூங்கா

1. உயிரியல் நில எழிலூட்டம் 0.759

2. கட்டுமான பொறியியல் நில எழிலூட்டம் 4.002

3. நீர்பாசன பணிகள் மற்றும் சூரியஒளி விளக்குகள் 0.165

4. இதர செலவினம் 0.493

5. திட்ட பராமரிப்பு செலவினம் 0.406

மொத்தம் 5.825

[த.தி.ப......

(உ)பாலை– இராமநாதபுரம்

**<u>திட்டம் மற்றும் நிதி மதிப்பீட்டின் விபரம்</u>**

| பாரம்பரிய மரபணுப் பூங்காவின் பெயர் | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் மேற்கொள்ளப்படவுள்ள மொத்த பரப்பு (ஏக்கரில்) | பகுதி-Iல் உத்தேசிக்கப்பட்டுள்ள மதிப்பீடு (ரூ கோடியில்) |
|---|---|---|---|---|
| பாலை | அச்சடிப்பிரம்பு (இராமநாதபுரம்) | 25.30 | 10 | 9.416 |

(ரூபாய் கோடியில்)

<u>பாலை மரபணு பூங்கா</u>

| | |
|---|---|
| 1. உயிரியல் நில எழிலூட்டம் | 1.121 |
| 2. கட்டுமான பொறியியல் நில எழிலூட்டம் | 6.522 |
| 3. நீர்ப்பாசன பணிகள் மற்றும் சூரியஒளி விளக்குகள் | 0.320 |
| 4. இதர செலவினம் | 0.796 |
| 5. திட்ட பராமரிப்பு செலவினம் | 0.657 |
| மொத்தம் | 9.416 |

5. எனவே, தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மேலாண்மை இயக்குநர், மேற்சொன்ன ஐந்திணை நில வகைகளில் பாரம்பரிய மரபணு பூங்காக்கள் அமைப்பது தொடர்பான முதற்கட்டமாக (பகுதி-I) பணிகளுக்கு ரூ.37.391 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

6. தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து மேற்படி மரபணு பூங்காக்கள் அமைப்பது தொடர்பான முதற்கட்ட பணிக்கு கோரப்பட்டுள்ள தொகையான ரூ.37.391 கோடியில், மேற்படி மரபணுப் பூங்காக்களில் குறிஞ்சி பூங்காவிற்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (National Agricultural Development Programme) ரூ.2.6395 கோடி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள தொகையான ரூ.34.752 கோடியில் சில்லரை செலவினங்கள் மற்றும் மேற்பார்வை கட்டணங்கள் 2.5 சதவிகிதம் மட்டுமே செலவினமாக

(த.தி.பா....)

மேற்கொள்ளப்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில், தமிழ்நாட்டில் பாரம்பரிய ஐந்திணை மரபணுப் பூங்காக்களை கீழ்க்கண்ட இடங்களில் அமைக்க தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநருக்கு நடப்பு நிதியாண்டில் "புதிய பணிகள்" (New Services) திட்டத்தின் கீழ், மேற்சொன்ன கருத்துருவிற்கான முதற்கட்ட பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்கண்டவாறு ரூ.32.413 கோடிக்கு (ரூபாய் முப்பத்து இரண்டு கோடியே நாற்பத்து ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ரூபாய் கோடியில்)

| வ.எண். | பாரம்பரிய மரபணு பூங்காவின் வகை, இடம், மாவட்டம் | பகுதி-Iஇல் எடுத்துக் கொள்ளப்படும் பரப்பளவு (ஏக்கரில்) | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | குறிஞ்சி (மலை) ஏற்காடு,சேலம் | 20 | 8.564 |
| 2. | முல்லை (காடு) சிறுமலை, திண்டுக்கல் | 12 | 7.109 |
| 3. | மருதம் (வயல்) மருதாநல்லூர், கும்பகோணம் | 20 | 3.529 |
| 4 | நெய்தல் (கடற்கரை) திருக்கடையூர், நாகப்பட்டினம் | 07 | 5.049 |
| 5. | பாலை (வறண்டநிலம்) அச்சடிப்பிரம்பு இராமநாதபுரம் | 10 | 8.162 |
| | ஆக மொத்தம் | | 32.413 |

(ரூபாய் முப்பத்து இரண்டு கோடியே நாற்பத்து ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)

இப்பணியினை தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் (TANHODA) மூலம் செயற்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது. மேற்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை 2010-2011 நிதியாண்டிற்குள் செலவினங்களை மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மற்றும் பாரம்பரிய மரபணு பூங்காக்களின் கூட்டுநர் அறிவுறுத்தப்படுகிறார்.

[த.தி.பா........

7. மேலே பத்தி 6ல் அனுமதிக்கப்பட்டுள்ள தொகையை கோரிக்கை எண். 05-05ன் கீழ் துவக்கப்பட்ட கீழ்க்கண்ட புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2401-00- பயிர் வளர்ப்பு - 190 பொதுத்துறை நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு நிதியுதவி-I திட்டத்தில் - சேராதது - AC - தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து இடங்களில் பாரம்பரிய மரபணு பூங்காக்கள் அமைக்க தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைக்கு உதவித் தொகை.09 உதவித் தொகை 02 மூலதனச் செலவுக்கான உதவித் தொகை.
(ததொகு எண். 2401 - 00 - 190 - AC - 0926)

8. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

9. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் / கருவூலக் கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலே பத்தி 6ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை "புதிய பணித்" திட்டமாக கருதப்பட வேண்டும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் விரைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி செலவினத்தை இம்மாநிலத்தின் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். இந்த அரசாணையின் நகலுடன் குறிப்பிட்ட படிவத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரிடமிருந்து விண்ணப்பம் பெற்ற பின் இதுகுறித்து நிதித் (BGI) துறையால் தனியாக நிதி ஒப்பளிப்பு செய்யப்படும். மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீடு 2010-2011 ல் சேர்ப்பதற்கு ஏதுவாக தேவையான விபரக் குறிப்பினை உரிய நேரத்தில் தவறாது அனுப்புமாறு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.100/JS(MVM)Agri/2011 நாள் 03.01.2011ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1689 (ஆயிரத்து அறநூற்று எண்பத்து ஒன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராமமோகன ராவ்,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன், பாராளுமன்ற உறுப்பினர்,
எம்.எஸ்.எஸ்.ஆர்.எப்., சென்னை.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை - 9.

[த.தி.பா.......

அரசு செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை - 9.
அரசு செயலாளர் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை - 9.
அரசு செயலாளர், கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும்
பால்வளத்துறை, சென்னை - 9.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை - 9.
அரசு செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித்துறை, சென்னை - 9.
முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆல்ஸ் சாலை, தமிழ் வளர்ச்சி
வளாகம், எழும்பூர், சென்னை - 8.
முதன்மை வனக்காப்பாளர், சென்னை.
துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் -3.
துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை.
துணை வேந்தர், தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தலைமைப் பொறியாளர், (வேளாண்மை பொறியியல்)
வேளாண்மைத்துறை, நந்தனம், சென்னை - 35.
வேளாண்மை ஆணையர் சேப்பாக்கம், சென்னை - 5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை - 5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை - 5.
மாவட்ட ஆட்சியர், சேலம்/திண்டுக்கல்/தஞ்சாவூர்/நாகப்பட்டினம்/இராமநாதபுரம்.
மாநிலக் கணக்காயர், சென்னை - 18.
மாநிலக் கணக்காயர், (தணிக்கை), சென்னை - 18.
சம்பளம்-கணக்கு அலுவலர், சென்னை-8.
கருவூல கணக்கு அலுவலர், சேலம்/திண்டுக்கல்/
தஞ்சாவூர் /நாகப்பட்டினம்/இராமநாதபுரம் மாவட்டம்.
நிதித் (வரவுச் செலவு, பொது, I &II/வேளாண்மை) துறை, சென்னை - 9.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், (எம்.டி.,), சென்னை - 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
மாண்புமிகு வேளாண்மை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின்
தனிச் செயலர், சென்னை - 9.
இ.கோ.,/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(signature)
பிரிவு அலுவலர்
3/1/2011.